


# சக்கர வியூகம்

டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதியதாக டிரஸ்ட்(அறக்கட்டளை), பவுண்டேஷன்(FOUNDATION), ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம்(ORGANISATION), ஆன்மீக அமைப்புகள்,அரசியல் கட்சி பதிவு செய்து தொடங்கிடவும் ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
BHAGAVAAN FOUNDATION
CELL: 99446 16559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| VOLUME : 01 | ISSUE: 199 | 12.1.2026 | MONDAY | MARGAZHI : 28 | PRICE : RS.5/- |
| மலர் : 01 | இதழ் : 199 | 12.1.2026 | திங்கள்கிழமை | மார்கழி : 28 | விலை : ரூ.5/– |

## PSLV-C62 இன்று

# “விண்ணில் பாய்கிறது”



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டத்தில் “உங்க கனவ சொல்லுங்க” எனும் புதிய திட்டத்தை காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் ஆகியோர் முன்னிலையில் பெற்றுக்கொண்டு, தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டைகளை வழங்கினார்கள்.

ஸ்ரீஹரிகோட்டா: ஜன.12-

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து, இன்று (ஜனவரி 12) காலை 10:17 மணிக்கு PSLV-C62 ராக்கெட் விண்ணில் ஏவப்பட உள்ளது. இந்த மிஷன் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புத் திறனை ஒரு புதிய உயரத்திற்கு எடுத்துச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சமாக EOS-N1 என்ற செயற்கைக்கோள் விளங்குகிறது, இதற்கு 'அன்வேஷா' (Anvesha) என்று குறியீட்டுப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.



இந்த PSLV-C62 சுமந்து செல்லும் EOS-N1 செயற்கைக்கோள், வெறும் படங்களை எடுக்கும் சாதாரண கருவி அல்ல. இது 'ஸ்பேஸ் இன்டெலிஜென்ஸ்' எனப்படும் விண்வெளி உளவுத் திறனை இந்தியாவிற்கு வழங்கப்போகிறது. இது சாதாரண கேமராக்களைப் போல வண்ணங்களை மட்டும் பார்க்காமல், ஒளியின் நூற்றுக்கணக்கான நிழல்களை (Shades) பகுப்பாய்வு செய்து பூமியின் நிலப்பரப்பு குறித்த துல்லியமான அறிக்கையைத் தயார் செய்யும். இதன் மூலம் மண்ணின் ஈரப்பதம், காடுகளின் அடர்த்தி மற்றும் நிலத்தடியில் மறைந்திருக்கும் உண்மைகளை அதன் தனித்துவமான டிஜிட்டல் கையெழுத்து (Digital Signature) மூலம் கண்டறிய முடியும்.

பாதுகாப்பு ரீதியாகப் பார்த்தால், இது எதிரி நாடுகளுக்கு ஒரு மிகப்பெரிய எச்சரிக்கையாக அமையும். மலைகள், காடுகள் மற்றும் பாலைவனங்களில் மறைந்திருக்கும் பயங்கரவாத முகாம்கள் அல்லது சந்தேகத்திற்கிடமான நகர்வுகளை இந்த செயற்கைக்கோளின் 'ஹைப்பர்ஸ்பெக்ட்ரல்' தொழில்நுட்பம் துல்லியமாகக் காட்டிக் கொடுத்துவிடும்.

வெறும் காட்சியாகப் பார்க்காமல், அது என்ன பொருள் என்பதை அடையாளம் காணும் திறன் கொண்டது. இந்தத் தொழில்நுட்பம். அதேபோல் விவசாயிகளுக்கு இது ஒரு சிறந்த நண்பனாக இருக்கும்; பயிர்களின் ஆரோக்கியம், நீர் பற்றாக்குறை மற்றும் வறட்சி அபாயம் போன்றவற்றை இது முன்கூட்டியே அறிவிக்கும். மேலும், புயல் மற்றும் காட்டுத் தீ போன்ற இயற்கை பேரிடர்களை முன்கூட்டியே கணித்து பெரும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு இது வழிவகுக்கும்.

இந்த ராக்கெட் இந்தியாவிற்கு மட்டும் சொந்தமானதல்ல, மாறாக ஒரு சர்வதேசப் பயணமாக அமையவுள்ளது. இதனுடன் ஸ்பெயின், பிரேசில், தாய்லாந்து, இங்கிலாந்து, நேபாளம் ஆகிய நாடுகளின் செயற்கைக்கோள்களும், இந்திய ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கியூப்சாட்களும் (Cube-sats) விண்ணில் ஏவப்படுகின்றன.

இதில் மொத்தம் 15 வெளிநாட்டு மற்றும் இந்தியச் சிறிய செயற்கைக்கோள்கள் அடங்கும். மேலும், வருங்காலத்தில் விண்வெளியில் இருந்து பொருட்களைப் பாதுகாப்பாகப் பூமிக்குக் கொண்டு வரும் தொழில்நுட்பத்தைச் சோதிக்க ஒரு 'ரீஎன்ட்ரி கேப்சூல்' ஒன்றும் இந்த ராக்கெட்டில் அனுப்பப்படுகிறது.

## அலங்காநல்லூரில் அதிமுக சார்பில் 48வது திண்ணை பிரச்சாரம்

### முன்னாள் அமைச்சர் உதயகுமார் பங்கேற்பு



அலங்காநல்லூர். ஜன.12

மதுரை அலங்காநல்லூரில் அதிமுக சார்பில் 48வது திண்ணை பிரச்சாரம் மற்றும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன், தலைமையிலும், நகர செயலாளர் அழகுராஜ், முன்னிலையிலும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவரும், திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.பி. உதயகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி 2026சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு சோழவந்தான் தொகுதியில் கழகத்தின் சார்பில் அறிவிக்கும் வேட்பாளருக்கு மகத்தான வெற்றியை தேடி தர வேண்டும் என கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து முனியாண்டிகோவில் அருகில் இருந்து ஐயப்பன்கோவில் வரை நடைபயணமாக சென்று துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது .

இதில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்கள் வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா,

வக்கீல் திருப்பதி, முன்னாள்சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா, மாணிக்கம், மகேந்திரன்,மதுரை மேற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன்,

மாவட்ட அம்மா பேரவை செயலாளர் தமிழழகன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் ஜெயச்சந்திரன் மணியன், மாவட்ட விவசாய அணி ஆர்.பி.குமார், அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் சுந்தர்ராஜன், வார்டு பொருளாளர் சுந்தரராகவன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மாணிக்கம், பெருமாள், ஒன்றிய முன்னாள் துணை சேர்மன் குணசேகரபாண்டியன், மகளிரணி மாவட்ட செயலாளர் லெட்சுமி,

பேரூராட்சி வார்டு செயலாளர்கள் பாஸ்கரன், வெள்ளை கிருஷ்ணன், பாண்டி, இணைச் செயலாளர் புலியம்மாள், அம்மா பேரவை மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், கிளைச் செயலாளர்கள் பாண்டுரங்கன், சுந்தர்ராஜன்,உள்பட பலர் கலந்து கொண்டனர்.



■ துணை முதல்வர் சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு குடிமங்கலம் மேற்கு ஒன்றியம் புக்குளம் ஊராட்சியில் குடிமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் எம்எஸ்.முரளி, ஒன்றிய பொருளாளர் கவுன்சிலர் எஸ் முருகானந்தம் அவர்களின் வழிகாட்டுதலின்படி, குடிமங்கலம் மேற்கு ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் பாசன சபை தலைவர் சாந்த கிருஷ்ணன் அவர்களின் ஏற்பாட்டில், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பி.எஸ் சுமன் அவர்களின் முன்னிலையில் கழகத் தோழர்களுடன் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 100 பேருக்கு போர்வை வழங்கப்பட்டது

# பணமா? பாசமா?

## பாசம் பக்கம் நின்று என்னை வெற்றிபெற வைத்தீர்கள் ஐ.பெரியசாமி உருக்கம்

## தவெக கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் 300 பேர் திமுகவில் இணைந்தனர்

சின்னாளபட்டி, ஜன.12

சித்தரேவு ஊராட்சியைச் சேர்ந்த த.வெ.க. கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் 300 பேர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். த.வெ.க மாவட்ட செயற்குழு உறுப்பினர் நெல்லூர் பால்பாண்டி தலைமையில் திமுகவில் இணைந்த அனைவருக்கும் கட்சி சின்னம் பொறித்த ஆடை அணிவித்து அமைச்சர் ஐ.பெரியசாமி வாழ்த்தினார்.



திண்டுக்கல் மாவட்டம் சித்தரேவு ஊராட்சிக்குட்பட்ட நெல்லூர், சித்தரேவு, குப்பிநாயக்கன்பட்டி உட்பட கிளைகளைச் சேர்ந்த ஒன்றிய செயற்குழு உறுப்பினர் வினோத்குமார், ஒன்றிய இணை செயலாளர் திருமுருகன், பூத்கமிட்டி கிஷோர் குமார், குப்பிநாயக்கன்பட்டி கிளை செயலாளர் ஜெயகோபால், நெல்லூர் கிளை செயலாளர் ரஞ் சித்குமார் உட்பட 37 த.வெ.க. கட்சி நிர்வாகிகள் மற்றும் 300க்கும் மேற்பட்ட தொண்டர்கள் த.வெ.க. மாவட்ட செயற்குழு உறுப்பினர் பால்பாண்டி தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்களுக்கு சால்வை அணிவித்து, தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். கட்சியில் இணைந்தவர்களுக்கு கட்சி சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், 2016 சட்ட மன்ற தேர்தலின்போது அதிமுகவைச் சேர்ந்தவர்கள் பல கோடி ரூபாய் செலவு செய்தும், ஆத்தூர் தொகுதியில் வெற்றிபெற முடியவில்லை. காரணம், பணமா, பாசமா என்று நான் கேட்டபோது பாசம் பக்கம் நின்று என்னை வெற்றிபெற வைத்தீர்கள். அதை நான் என்றும் மறக்க மாட்டேன்.

ஆத்தூர் தொகுதியை பொறுத்துவரை ஒரு ரூபாய் கூட வாங்காமல் 150க்கும் மேற்பட்டோருக்கு அரசு வேலை வாய்ப்பை வழங்கி உள்ளோம். இன்று இளைஞர்கள் அதிக அளவில் திமுகவில் இணைகிறார்கள் என்றால், அவர்களுக்கு நிச்சயம் அரசு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையே, அவர்களையும், கழகத்தில் இணைந்தவர்களையும், ஒருபோதும் நான் கைவிட மாட்டேன். என்னால் முடிந்தவரை ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு கிடைக்க தொடர்ந்து பாடுபடுவேன், சித்தரேவு ஊராட்சி பகுதியில் அனைத்து நலத்திட்டங்களையும் 100 சதவீதம் நிறைவேற்றுவேன் என்றார். அப்போது அங்கிருந்த இளைஞர்கள், பெண்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

நிகழ்ச்சியின்போது கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், நெடுஞ்செழியன், நிலக்கோட்டை மணிகண்டன், சௌந்திரபாண்டியன், கொடைக்கானல் ஒன்றிய செயளார் ஏ.சி.அய்யப்பன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், கொத்து கொத்தாய், கூட்டம் கூட்டமாய் த.வெ.க. கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள் அக்கட்சியை விட்டு திமுகவில் தொடர்ந்து இணைந்து வருவது த.வெ.க கட்சியினர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.



# சென்னை பூந்தமல்லி வடபழனி மெட்ரோ ரயில் சேவையை பிப்ரவரி 2வது வாரத்தில் தொடங்க திட்டம்

சென்னை, ஜன.12-

சென்னை பூந்தமல்லி வடபழனி இடையே பிப்ரவரி 2வது வாரத்தில் மெட்ரோ ரயில் சேவையைத் தொடங்க திட்டமிட்டிருப்பதாக சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. போரூர் முதல் வடபழனி வரையிலான மெட்ரோ ரயில் வழித்தடத்தில் இன்று (ஜன.11) சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நிறைவுபெற்றது. இந்த வழித்தடத்தில் ஏற்கெனவே ரயில் என்ஜின் மூலம் சோதனை நடத்தப்பட்ட நிலையில், அதன் தொடர்ச்சியாக இன்று முழு மெட்ரோ ரயிலையும் இயக்கி சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், சோதனை ஓட்டம் உள்ளிட்ட தொழில்நுட்ப அம்சங்களை உறுதிப்படுத்தும் வகையில் நடைபெற்றது. இதனையடுத்து, பூந்தமல்லி வடபழனி இடையே பிப்ரவரி 2வது வாரத்தில் மெட்ரோ ரயில் சேவையைத் தொடங்க திட்டமிட்டிருப்பதாக சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த வழித்தடத்தில் போக்குவரத்து தொடங்கினால் 25 நிமிடங்களில் பூந்தமல்லி பைபாஸில் இருந்து வடபழனி சென்றடையலாம் என்றும், 7 நிமிடத்தில் ஒரு ரயில் என்ற வீதத்தில் சேவை இருக்கும் எனவும் கூறப்படுகிறது. பின்னர், சென்னை மெட்ரோ ரயில் மேலாண் இயக்குநர் சித்திக் இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "போரூர் வடபழனி இடையே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. பூந்தமல்லி வடபழனி இடையே வரும் பிப்ரவரி இரண்டாம் வாரம் பயணிகள் ரயில் சேவையை தொடங்க திட்டமிட்டிருக்கிறோம். பின்னர் ஜூன் மாதத்தில் கோடம்பாக்கம் வரை நீட்டிக்கப்படும். முதற்கட்டமாக ஓட்டுநருடன் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும். பின்னர் ஜூன் மாதத்துக்கு பிறகு ஓட்டுநர் இன்றி மெட்ரோ ரயில் சேவை இயக்க திட்டமிட்டிருக்கிறோம். பூந்தமல்லியில் இருந்து வடபழனிக்கு 25 நிமிடங்களில் செல்லலாம்" என்று அவர் கூறினார்



# நீலகிரியில் திடீர் மழை: உள்ளூர் மக்கள், சுற்றுலா பயணிகள் அவதி

ஊட்டி, ஜன.12-

நீலகிரி மாவட்டத்தில் காலநிலை மாற்றம் ஏற்பட்டு திடீர் மழை பெய்தது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்கள் பனி பொழிவும் அதிகமாக உள்ளதால் வனங்கள், தேயிலை தோட்டங்கள் கருகி வருகின்றன. கோடையில் பசுமையை காண்பதே அரிதாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், நீலகிரி மாவட்ட மக்கள் சற்றும் எதிர்பார்க்காத நிலையில், காலநிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது.

நேற்று இரவு முதல் லேசான மழை பெய்து வருகிறது. ஊட்டி, குந்தா, கோத்தகிரி, குன்னூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழையின் தாக்கம் சற்று அதிகமாக காணப்பட்டது. பிற இடங்களில் மழையின் அளவு சற்று குறைந்தே காணப்பட்டது. எனினும், இன்று பகலிலும் கடும் மேக மூட்டத்துடன், அவ்வப்போது சாரல் மழை பெய்தது. கடும் மேக மூட்டம் காரணமாக பகல் நேரங்களிலேயே எதிரே வரும் வாகனங்கள் தெரியாத நிலையில், முகப்பு விளக்குகளை எரியவிட்டபடியே சென்றனர்.மேலும், ஊட்டி மற்றும் புறநகர் பகுதிகளில் கடும் குளிர் நிலவியது. கடும் குளிரால் சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி உள்ளூர் மக்களும் கடும் அவதிக்குள்ளாகினர். பல மாதங்களுக்கு பின் ஊட்டியில் மழை தலைகாட்டிய நிலையில், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.இந்நிலையில், ஊட்டி கோத்தகிரி சாலையில் கோத்தகிரி அருகே மரம் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. நெடுஞ்சாலை துறையினர் மரத்தை வெட்டி அகற்றிய பின்னர் போக்குவரத்து சீரானது. மாவட்டத்தில் மாலை நிலவரப்படி குன்னூர் 44, கோடநாடு 39, கோத்தகிரி 31, கிணக்கணக்கொரை 24, குந்தா 22, அவலாஞ்சி 20, எமரால்டு 20, ஊட்டி 17, கீழ் கோத்தகிரி 15, கெத்தை 15, மி.மீ., மழை பதிவானது.

# பாகிஸ்தானில் இந்து இளைஞர் சுட்டுக் கொலை: சிந்து பகுதியில் அரசியல் கட்சியினர் போராட்டம்

கராச்சி, ஜன.12-

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள பதின் பகுதியில் உள்ள ரகோ கோல்ஹி கிராமத்தில் கைலாஷ் கோலி என்ற இந்து இளைஞர் வசித்து வந்தார்.ஏழை விவசாயியான இவர், சர்ஃபரஸ் நிசாமணி என்பவரது நிலத்தில் குடிசை வீடு கட்டினார். இதற்காக சர்ஃபரஸ் நிசாமணி, கைலாஷ் கோலியை சுட்டுக் கொன்றார். இவர் இப்பகுதியில் செல்வாக்குமிக்க நில உரிமையாளர்.இந்த சம்பவத்தை கண்டித்து கைலாஷ் கோலி குடும்பத்தினர் மற்றும் அங்குள்ள இந்துக்கள் அவரது உடலை சாலையில் வைத்து போராட்டம் நடத்தினர். அப்போது குற்றவாளியை 24 மணி நேரத்தில் கைது செய்வதாக பதின் நகர போலீஸ் அதிகாரி உறுதியளித்தார். ஆனால் 4 நாட்களாகியும் குற்றவாளி கைது செய்யப்படவில்லை.

இதனால் இச்சம்பவத்தை கண்டித்து பாகிஸ்தான் சிந்து பகுதியில் மிகப் பெரியளவில் போராட்டம் நடைபெறுகிறது. இதில் அரசியல் கட்சி தலைவர்கள், தொண்டர்கள், ஜமியத் உலமா இஇஸ்லாம், பாகிஸ்தான் தெக்ரிக் இ இன்சாப் கட்சி, ஜியோ சிந்து மகாஷ், குவாமி அவாமி தெக்ரிக், ஜியோ சிந்து குவாமி மகஷ், அவாமி தெக்ரீக் போன்ற சமூக அமைப்புகளும் பங்கேற்றன.இதுகுறித்து பாகிஸ்தான் தராவர் இதிகாட் அமைப்பின் தலைவர் சிவா கச்சி எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது: கைலாஷ்கோலியை கொலை செய்தவர்களை கைது செய்யக்கோரி நடைபெறும் போராட்டம் வரலாறு படைத்து வருகிறது. இது போராட்டம் மட்டும் அல்ல. காயமடைந்த மனசாட்சியின் குரல்.நீதி கோரி நாங்கள் நடத்தும் போராட்டத்தை அடக்க முடியாது. இதில் ஆண்கள், பெண்கள், முதியவர்கள், அப்பாவி குழந்தைகள் தெருவில் அமர்ந்து கைலாஷ் கோலிக்கு நீதி கோரி குரல் எழுப்பினர். ஏழையாக இருந்ததுதான் கைலாஷ் கோலியின் ஒரே குற்றம். ஏழையின் ரத்தம் மலிவானதா? இவ்வாறு சிவா கூறியுள்ளார்.

# SIR ஆவணங்கள் சரிபார்ப்புக்கு ஆஜராக அமர்த்தியா சென்னுக்கு நோட்டீஸ்: தேர்தல் ஆணையத்துக்கு மம்தா கண்டனம்

புதுடெல்லி, ஜன.12-

நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென்னுக்கு எஸ்ஐஆர் விசாரணை நோட்டீஸ் அனுப்பப்பட்டது தொடர்பாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தேர்தல் ஆணையத்தைக் கடுமையாகச் சாடியுள்ளார். எஸ்.ஐ.ஆர் எனப்படும் வாக்காளர் பட்டியலின் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. பிஹாரில் முதற்கட்டமாகத் தொடங்கப்பட்ட இப்பணி, தற்போது புதுச்சேரி, குஜராத், கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெற்று வருகின்றன.



இந்த நிலையில், சிறப்பு தீவிர திருத்தம் (SIR) செயல்முறையின் ஒரு பகுதியாக கொல்கத்தாவில் விசாரணைக்கு ஆஜராகுமாறு இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி உள்ளிட்டோருக்கு தேர்தல் ஆணையம் சம்மன் அனுப்பியது பெரும் சர்சசையானது. இதனைத் தொடர்ந்து, நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென்னை தேர்தல் அதிகாரிகளின் முன் ஆஜராகி தனது அடையாளங்களை நிரூபிக்கக் கோரியதாக தெரிகிறது.


இதற்கு, மேற்குவங்க முதலல்வர் மம்தா பானர்ஜி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மம்தா, தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், "நோபல் பரிசு பெற்றவரும், 90 வயது நிரம்பியவரும், உலகளவில் மதிக்கப்படும் அறிஞருமான பேராசிரியர் அமர்த்தியா சென், தனது அடையாளங்களை நிருபிக்க தேர்தல் ஆணைய அதிகாரிகளின் முன் ஆஜராகும்படி கேட்கப்பட்டிருப்பது பெரும் அவமானத்திற்குரிய விஷயம்" என தெரிவித்துள்ளார். இதற்கு முன்பு முதல்வர், தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எழுதிய சமீபத்திய கடிதத்தில், "மேற்கு வங்கத்தில் நடைபெற்று வரும் சிறப்புத் தீவிரத் திருத்தப் பணியைக் கண்டித்து எழுதப்பட்டது. தேர்தல் ஆணையத்தின்படி, தரவுப் பதிவுகளிலிருந்து கணக்கிடப்பட்டதில், சென் மற்றும் அவரது தாயார் அமிதா சென் ஆகியோருக்கு இடையிலான வயது வித்தியாசம் 15 ஆண்டுகளுக்கும் குறைவாக இருந்ததால் அவரின் அடையாளங்களை கேட்டுள்ளனர்.

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின் போது புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் விசாரணைக்கு நேரில் ஆஜராகத் தேவையில்லை, மேலும் இந்த சிக்கலைத் தீர்க்க அவரது சார்பில் ஒரு பிரதிநிதி மூலம் ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம்." என கூறப்படுகிறது.

# 8 போர்களை நிறுத்திய எனக்கு நோபல் பரிசு இல்லையா? அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விரக்தி

வாஷிங்டன், ஜன.12-

வெனிசுலாவில் கச்சா எண்ணெய் எடுப்பது குறித்து அமெரிக்க எண்ணெய் நிறுவன நிர்வாகிகளுடன் வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார். அப்போது அதிபர் ட்ரம்ப் கூறியதாவது:மக்களுக்கு என்னைப் பிடிக்கிறதோ, இல்லையோ, நான் மிகப் பெரிய அளவில் நடைபெறவிருந்த 8 போரை நிறுத்தினேன். இவற்றில் சில 36 ஆண்டுகள், 32 ஆண்டுகள் நடைபெற்றவை. இந்தியா பாகிஸ்தான் போரில் 8 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அமெரிக்கா வந்த பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஷ் ஷெரீப், அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் இரு நாடுகள் இடையே நடைபெற





இருந்த போரை நிறுத்தி லட்சக்கணக்கானோரை காப்பாற்றியதாக என்னை பாராட்டினார்.எனது 2வது ஆட்சி காலத்தில் 8 மாதத்தில் 8 போர்களை நிறுத்தியதால், நோபல் பரிசு பெற, வரலாற்றில் என்னைவிட தகுதியானவர் வேறு யாரும் இல்லை. ஒபாமாவுக்கு நோபல் பரிசு கிடைத்தது. அவருக்கு அதைபற்றி எதுவுமே தெரியாது. அவருக்கு எதற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது? எதுவும் செய்யாமல் அமெரிக்க அதிபராக பதவியேற்றவுடனே, அவர் நோபல் பரிசு பெற்றார். இவ்வாறு ட்ரம்ப் கூறினார்.புதினை கைது செய்வீர்களா? கடந்த 3ம் தேதி வெனிசுலா தலைநகர் கராகஸ் மீது அமெரிக்க ராணுவம் திடீர் தாக்குதலை நடத்தியது. அந்த நாட்டு அதிபர் நிக்கோலஸ் மதுரோ, அவரது மனைவி சிலாயா புளோரஸ் கைது செய்யப்பட்டு, நியூயார்க் சிறையில் அடைக்கப்பட்டனர்.இதேபோல ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை கைது செய்வீர்களா என்று அமெரிக்க அதிபர் ட்ரம்பிடம் நிருபர்கள் நேற்று கேள்வி எழுப்பினர்.அதற்கு ட்ரம்ப் கூறும்போது, ''ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை கைது செய்ய அவசியம் இருக்காது. அதற்கான தேவை எழாது. அதிபர் புதினு டன் நல்லுறவு நீடிக்கிறது. ஆனா லும் சில விவகாரங்களில் ஏமாற்றம் நீடிக்கிறது'' என்றார்

# கூட்டணி ஆட்சி இல்லை என்பதில் முதல்வர் உறுதியாக இருக்கிறார்" அமைச்சர் ஐ.பெரியசாமி தகவல்

திண்டுக்கல், ஜன.12-

ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பது எப்பொழுதும் கிடையாது. கூட்டணி ஆட்சி இல்லை என்பதில் தமிழக முதல்வர் உறுதியாக இருக்கிறார் என திண்டுக்கல்லில் அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார்.திண்டுக்கல் மாநகராட்சி மேட்டுப்பட்டி பகுதியில் சமத்துவ பொங்கல்விழா இன்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற அமைச்சர் ஐ.பெரியசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:ஆட்சியில் பங்கு கேட்பது கூட்டணிக் கட்சிகளின் உரிமை. ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பது எப்பொழுதும் கிடையாது. தனிப்பட்ட கட்சியன் ஆட்சி தான். கூட்டணி ஆட்சி இல்லை என்பதில் தமிழக முதல்வர் உறுதியாக இருக்கிறார்.சென்சார் போர்டு குறித்து முதல்வர் வைத்துள்ள குற்றச்சாட்டு உண்மை தான். பொங்கலுக்கு பெண்களுக்கு தித்திப்பான செய்தி உள்ளது எனக் கேள்விப்படுகிறேன். இதுகுறித்து தமிழக முதல்வர் தான் கூறவேண்டும்" இவ்வாறு அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார்.





# ஆக்ராவில் சட்டவிரோதமாக வசித்த வங்கதேசத்தை சேர்ந்த 38 பேர் நாடு கடத்தல்

ஆக்ரா, ஜன.12-

உத்தரபிரதேச மாநிலம் ஆக்ரா உதவி காவல் ஆணையர் (புலனாய்வு) தினேஷ் சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: கடந்த 2022ம் ஆண்டு பிப். 5ம் தேதி, ஆக்ராவின் சிக்கந்திரா காவல் நிலையப் பகுதிக்குட்பட்ட செக்டார் 15ல் சட்டவிரோதமாக வங்கதேசத்தை சேர்ந்த 38 பேர் சட்டவிரோதமாக வசிப்பது கண்டறியப்பட்டது. இவர்களில் 23 பேர் ஆண்கள், 7 பேர் பெண்கள், 8 பேர் சிறார்கள் ஆவர். அவர்கள் யாரிடமும் செல்லுபடியாகும் ஆவணம் எதுவும் இல்லை.

இந்தியாவில் சட்டவிரோதமாக வசித்த குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் 3 ஆண்டு தண்டனை விதித்தது. இதைடுத்து 7 பெண்கள் உள்ளிட்ட 30 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். 8 சிறார்களும் குழந்தைகள் இல்லம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தனர். தற்போது அனைவரும் தண்டனை காலத்தை நிறைவு செய்துவிட்டனர். எனவே இவர்கள் 38 பேரும் வாகனங்கள் மூலம் வங்கதேச எல்லைக்கு சனிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் ஜனவரி 13ம் தேதி எல்லை பாதுகாப்பு படையிடம் ஒப்படைக்கப்படுவார்கள். இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.



# டெல்லி அமைச்சர் கபில் மிஸ்ரா மீது வழக்கு: 3 பஞ்சாப் போலீஸ் அதிகாரிக்கு டெல்லி சபாநாயகர் நோட்டீஸ்

புதுடெல்லி, ஜன.12-

டெல்லி சட்டப்பேரவை கூட்டம் கடந்த 6ம் தேதி நடைபெற்றது. அப்போது, சீக்கிய குரு தேஜ் பகதூரை எதிர்க்கட்சித் தலைவர் ஆதிஷி அவமதித்ததாக பாஜக குற்றம் சாட்டியது. இது தொடர்பான வீடியோவை சட்ட அமைச்சர் கபில் மிஸ்ரா வெளியிட்டார்.

இதனிடையே ஆதிஷியின் வீடியோவை உள்நோக்கத்துடன் எடிட்டிங் செய்து போலி வீடியோவை வெளியிட்டதாக பஞ்சாப் போலீஸாரால் டெல்லி சட்ட அமைச்சர் கபில் மிஸ்ரா மீது எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக டெல்லி சட்டப்பேரவை சபாநாயகர் விஜேந்தர் குப்தா, பஞ்சாப் டிஜிபி, குற்றப்பிரிவு டிஜிபி மற்றும் ஜலந்தர் போலீஸ் கமிஷனர் ஆகியோருக்கு நேற்று நோட்டீஸ் அனுப்பினார்.

அதில், ''சம்பந்தப்பட்ட வீடியோ டெல்லி பேரவையின் சொத்து. இதை பஞ்சாப் போலீஸார் பயன்படுத்துவது கிரிமினல் குற்றம். வீடியோ விவகாரத்தில் அமைச்சர் கபில் மிஸ்ரா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது குறித்து 48 மணி நேரத்தில் விளக்கம் அளிக்க வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# சுவேந்து அதிகாரி தாக்கப்பட்டதாக மேற்கு வங்கத்தில் பாஜகவினர் போராட்டம்

கொல்கத்தா, ஜன.12-

சுவேந்து அதிகாரி மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறி, அதனைக் கண்டிக்கும் விதமாக, மேற்கு வங்கம் மாநிலம் முழுவதும் பாஜக சார்பில் இன்று போராட்டம் நடைபெற்றது. மேற்கு வங்க சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி நேற்று புருலியாவில் பாஜக நிர்வாகிகளுடன் முக்கிய ஆலோசனை நடத்தினர். பின்னர், இரவு மிட்னாபூருக்கு அவர் காரில் சென்றார். அப்போது அவரது காரை திரிணமூல் காங்கிரஸ் வழிமறித்து



தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. இதைக் கண்டித்து சந்திரகோனா போலீஸ் நிலையத்தில் சுவேந்து அதிகாரி நேற்று இரவு தர்ணாவில் ஈடுபட்டார். அவர் கூறும்போது, "நான் செல்லும் இடமெல்லாம் திரிணமூல் காங்கிரஸார் என்னை குறிவைத்து தாக்குதல் நடத்துகின்றனர். மிட்னாபூரில் தாக்குதல் நடத்தியபோது போலீஸார் வேடிக்கை பார்த்தனர். தாக்குதலில் தொடர்புடைய திரிணமூல் காங்கிரஸார் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார். இந்த விவகாரம் தொடர்பாக மேற்கு வங்கம் முழுவதும் பாஜக தொண்டர்கள் இன்று பல்வேறு போராட்டங்களை நடத்தினர். மிட்னாபூர், சோனாமுகி உள்ளிட்ட பகுதிகளில் சாலை மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. இது தொடர்பாக திரிணமூல் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஆருப் சக்கரவர்த்தி கூறும்போது, "எதிர்க்கட்சி தலைவர் சுவேந்து அதிகாரி மீது யாரும் தாக்குதல் நடத்தவில்லை. அவர் காரில் சென்றபோது, 'ஜெய் பங்களா' என்று மட்டுமே எங்கள் தொண்டர்கள் குரல் எழுப்பினர். இதைகூட சுவேந்து அதிகாரியால் சகித்துக் கொள்ள முடியவில்லை" என்று தெரிவித்தார். முன்னதாக, திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் அரசியல் வியூக நிறுவனமான ஐபேக்கின் கொல்கத்தா அலுவலகம், அதன் இயக்குநர் பிரதீக் ஜெயின் உட்பட 10 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் அண்மையில் சோதனை நடத்தினர். அப்போது சோதனை நடந்த இடங்களில் முதல்வர் மம்தா பானர்ஜி நுழைந்து சில ஆவணங்கள், மின்னணு சாதனங்களை எடுத்துச் சென்றார். இது தொடர்பாக அமலாக்கத் துறை சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. இந்த விவகாரத்தில் திரிணமூல் காங்கிரஸ் பாஜக இடையே வார்த்தைப் போர் வலுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.



## திருப்பூர் பல்லடம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் கிரிக்கெட் போட்டி துவக்க விழா

திருப்பூர், ஜன.12-

தமிழர் திருநாளாம் தை திருநாளை முன்னிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், பல்வேறு போட்டிகள் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக திருப்பூர் மத்திய மாவட்டம் பல்லடம் வடக்கு ஒன்றிய சார்பில், கெம்பே நகர் ஆட்டக்களம் டரப் மைதானத்தில் கிரிக்கெட் திருவிழா நடைபெற்றது. இந்த நிகழ்வினை திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் க.செல்வராஜ் எம்எல்ஏ அவர்கள் கிரிக்கெட் போட்டியினை துவக்கி வைத்தார் விழா ஏற்பாடு பல்லடம் வடக்கு ஒன்றிய செயலாளர் கே பி சீனிவாசன் தலைமை தாங்கினார்.இளைஞர் அணி நிர்வாகிசரண் சீனிவாசன் முன்னிலை வகித்தார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் செந்தில் எ தியாகராஜ்.மாவட்ட இலக்கிய அணி துணை தலைவர் பிரகாஷ்.மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் என் எஸ் கே ஸ்ரீசிவா.மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ் எம் பழனிச்சாமி. 63 வேலம்பாளையம் ஆனந்த். குன்னாங்கல் பாளையம் துரைசாமி.வின்சென்ட். காமராஜ்.சுரேஷ்.தீரஜ். ஆனந்த் குமார்.அருள் மற்றும் கழக நிர்வாகிகள் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.



## 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் மத்திய அரசை கண்டித்து தொடர்ந்து போராடுவோம்" மாணிக்கம் தாகூர் எம்.பி

விருதுநகர், ஜன.12-

"மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டத்தை ஒழிக்கும் மத்திய அரசைக் கண்டித்து மக்களைத் திரட்டி தொடர்ந்து பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்துவோம்" என மாணிக்கம் தாகூர் எம்.பி. கூறினார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மகாத்மா காந்தி பெயர் நீக்கப்பட்டதைக் கண்டித்தும் 100 நாள் வேலை வாய்ப்பு உறுதிச் சட்டத்தை கைவிட்ட மத்திய அரசைக் கண்டித்தும் விருதுநகரில் காங்கிரஸ் கட்சி சார்பில் இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

விருதுநகர் ரயில் நிலைய முகப்பில் காந்தி சிலை அருகே நடைபெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு மாணிக்கம் தாகூர் எம்.பி. தலைமை வகித்தார்.


அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியது, “நூறு நாள் வேலை உறுதித் திட்டத்தை நிறுத்திய மத்திய அரசைக் கண்டித்து நாடு முழுவதும் இன்று பல்வேறு இடங்களில் 7 லட்சம் காங்கிரஸ் கட்சியினர் உண்ணாவிரதப் போராட்டம் இன்று நடக்கிறது. வேலை உரிமைச் சட்டத்தை எதிர்த்த மோடி அரசைக் கண்டித்து இந்தப் போராட்டம் நடக்கிறது. 100 நாள் வேலை திட்டத்தை மீண்டும் கொண்டுவரக் கோரி 45 நாள் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் முதல்கட்டமாக உண்ணாவிரதப் போராட்டம், கிராமங்களுக்கு செல்லும் போராட்டம், சத்தியாகிரக போராட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு போராட்டம், ஆளுநர் மாளிகை முன்பு என போராட்டம் தொடரும். மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய சட்டத்தில் 60 சதவீத தொகை மத்திய அரசும், 40 சதவீதம் மாநில அரசும் கொடுக்க வேண்டும். மாநில அரசிடம் நிதி இல்லை என்றால் இத்திட்டம் நிறுத்தப்படும். இதை மக்களிடம் கொண்டு செல்வோம். மக்களைத் திரட்டி தொடர்ந்து போராட்டம் நடத்துவோம்” என்றார்.உண்ணாவிரதப் போராட்டத்தில் மூத்த நிர்வாகிகள் சிவகுருநாதன், பாலகிருஷ்ணசாமி, கிருஷ்ணமூர்த்தி உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## டெல்லி சென்று அமித் ஷாவிடம் ‘சரண்டர்’ ஆன பழனிசாமி

அரியலூர், ஜன.12-

“தனித்து ஆட்சி என்று அறிவித்த பழனிசாமி, இரண்டே நாளில் டெல்லி சென்று அமித் ஷாவிடம் சரண்டர் ஆகி விட்டார்” என போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்தார்.

அரியலூரில் இன்று அவர் செய்தியாளர்களிடம் கூறியது: “தற்போது தனியார் ஆம்னி பேருந்துகளை விட, அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணிக்க பயணிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அரசு பேருந்துகள் இல்லாத ஊர்களுக்கு வேண்டுமானால், ஆம்னி பேருந்துகளில்



கட்டண உயர்வு என்பது இருந்திருக்கலாம். ஆனால், அதுகுறித்து இதுவரை எந்தப் புகாரும் வரவில்லை. புகார் வரும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிமுகவை அமித் ஷாவிடம் அடிமைக் கட்சியாக பழனிசாமி அடமானம் வைத்துள்ளார். தனித்து ஆட்சி என்று அறிவித்த பழனிசாமி, இரண்டே நாளில் டெல்லி சென்று அமித் ஷாவிடம் சரண்டர் ஆகி விட்டார். அதிமுகவை தேடி பாஜக வந்து கூட்டணி பேசிய நிலை மாறி, பாஜகவை தேடி அதிமுக சென்று பேச்சுவார்த்தை நடத்தும் நிலை உள்ளது.

முதற்கட்டமாக 20 டபுள் டக்கர் (மாடி) பேருந்துகள் வாங்குவதற்கு மாநகர போக்குவரத்து கழகம் டெண்டர் விட்டுள்ளது. அது முடிந்தவுடன் முதற்கட்டமாக சென்னையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஜனநாயகம் பட விவகாரத்தில் திரைப்பட தணிக்கை வாரியம், மத்திய அரசின் ஆயுதங்களில் ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது” என்று அவர் கூறினார்.

## கொத்திமங்களம் பகுதியில் பாரம்பரிய முறையில் போகி மேளம் தயாரித்து விற்பனை


மாமல்லபுரம், ஜன.12-

திருக்கழுக்குன்றம் அடுத்த கொத்திமங்களம் பகுதியில் பாரம்பரிய முறையில் போகி மேளம் தயாரித்து விற்பனை செய்யும் அருந்ததியர் மக்கள், தங்களின் வாழ்வாதாரத்தை காக்கும் வகையில் பிளாஸ்டிக் மேளத்தை தடை செய்யவும், மானியத்துடன் கடனுதவி வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை விடுத்துள்ளனர். செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் அடுத்த கொத்திமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட அருந்ததியர்புரம் கிராமத்தில் 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அமைந்துள்ளன. இவர்கள், அனைவரும் போகி மேளம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், தற்போது பிளாஸ்டிக் பொருட்களால்



தயாரிக்கப்பட்ட மேளம் விற்பனை செய்யப்படுவதால், பாரம்பரியாக தயாரிக்கப்படும் போகி மேளம் விற்பனை குறைந்துள்ளதாக அதை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.மேலும், தொழிலாளர்களுக்கு சீசன் தொடங்கும்போது, மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து, அப்பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் கூறியது: “போகி மேளம் தயாரிக்க சென்னையில் உள்ள ஆட்டுத்தொட்டிக்கு சென்று மொத்தமாக தோல் மற்றும் மாட்டு கொழுப்பு, குயவர்களிடமிருந்து பானை செய்ய பயன்படுத்தப்படும் கல ஒட்டி, சுண்ணாம்பு பொருட்கள் உள்ளிட்டவற்றை வாங்கி வந்து, அவற்றை முறையில் அடிப்படையில் ஒன்று சேர்த்து பாரம்பரியமாக மேளம் தயாரித்து தலா ஒருமேளம் ரூ.50 என விற்பனை செய்கிறோம். இதிலும், கிராமங்கம் மற்றும் நகரப்பகுதிக்கு ஏற்றவாறு விலை மாறுபாடு உள்ளது. ஆனால், காலத்தின் மாற்றம் இந்த மேளத்தை தவிர்த்து பிளாஸ்டிக் மேளத்தையே பொதுமக்கள் நாடி செல்லும் நிலை உள்ளது.

தற்போது, அருந்ததியர் சமூகம் மட்டும் தான் போகி மேளம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறோம். எங்களுக்கு, பொங்கல் சீசனில் அரசு முன் தொகையாகவோ அல்லது மானியத்துடன் கூடிய கடனாகவோ நிதி உதவி செய்து கொடுத்தால் மேளம் தயாரிப்பு தொழில் சிறப்பாக இருக்கும். ஆனால், கடனுதவி இல்லாததால், வட்டிக்கு வாங்கி செலவு செய்து தொழிலை மேற்கொள்கிறோம். எனினும், எங்களுக்கு நஷ்டம் மட்டுமே வந்து சேர்கிறது. இதில், லாபம் இல்லாத போதும், குலதொழிலாக சிலர் செய்து வருகின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை வரும் பண்டிகையை அனைவரும் கொண்டாட வேண்டும்.அதேபோல், போகி நேரத்தில் அருந்ததியர் மக்களால் செய்யப்படும் மேளத்துக்கு உரிய விலையை அரசே நிர்ணயிக்க வேண்டும். எங்களிடமிருந்து அரசே கொள்முதல் செய்து விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில், முக்கியமாக பிளாஸ்டிக் மேளத்தை தடை செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர்.



## டெல்லியில் உலக புத்தக காட்சி தொடக்கம்: 35 நாடுகளைச் சேர்ந்த 1000 வெளியீட்டாளர் பங்கேற்பு

புதுடெல்லி, ஜன.12-

தலைநகர் டெல்லியில் தொடங்கியுள்ள உலக புத்தக காட்சியில் 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட வெளியீட்டாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

உலக புத்தகக் காட்சியில் டெல்லியில் நேற்று தொடங்கியது. 9 நாட்கள் நடைபெறும் இந்தக் புத்தகக் காட்சியை மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்தார். இதில் ஸ்பெயின் கலாச்சாரத் துறை அமைச்சர் எர்னஸ்ட் உர்தாசன் டோம்நெக், இந்தியாவுக்கான கத்தார் தூதர் முகமது ஹாச் அல்ஜபிர், கத்தார் கலாச்சாரத்துறை அமைச்சர் ஷேக் அப்துல் ரகுமான் ஆகியோர் பங்கேற்றனர்.இந்திய ராணுவத்தின் வரலாறு என்ற கருப்பொருளில் இந்த புத்தகக் காட்சி டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெறுகிறது. இதில் அனுமதி இலவசம்.

இந்த புத்தகக் காட்சியில் 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட வெளியீட்டாளர்கள் பங்கேற்றுள்ளனர். இந்திய ராணுவத்தின் வீரம் மற்றும் ஞானத்தை போற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் 500க்கும் மேற்பட்ட புத்தகங்கள், போஸ்டர்களை டேராடூனில் உள்ள இந்திய ராணுவ அகாடமி காட்சிக்கு வைத்துள்ளது. இந்த அரங்கில் அர்ஜுன் டேங்க், ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பல், தேஜஸ் போர் விமானம் ஆகியவற்றின் மாதிரிகள் வைக்கப்பட்டுள்ளன. பரம்வீர் சக்ரா விருது பெற்றவர்களுக்கு இங்கு புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.1947ம் ஆண்டு முதல் ஆபரேஷன் சிந்தூர் வரை நாடு மேற்கொண்ட முக்கிய போர்கள் பற்றிய விளக்கங்கள் இங்கு அளிக்கப்படுகின்றன. வந்தே மாதரம் பாடலின் 150ம் ஆண்டு விழா, சர்தார் வல்லபபாய் படேலின் வாழ்க்கை ஆகியவையும் இந்த புத்தக காட்சியில் இடம் பெற்றுள்ளன.இங்கு 3000க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 600 இலக்கிய நிகழ்ச்சிகளும் இங்கு நடைபெறுகின்றன. இதில் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், பிரபலங்கள் பலரும் பங்கேற்கின்றனர்.

## தமிழக ஊராட்சி தூய்மை காவலர்கள், பம்ப் ஆப்ரேட்டர்களுக்கு விரைவில் ஊதிய உயர்வு அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி

சின்னாளபட்டி, ஜன.12-

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் தொழிலாளர் சங்கம் சார்பாக இந்திய கம்யூனிஸ்ட் மாநில பொருளாளர் எம்.ஆறுகம் தலைமையில் ஏ.ஐ.டியு.சி மாநில பொதுச் செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன், சி.பி.ஐ. திண்டுக்கல் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன். தமிழக ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர் சங்க மாநில தலைவர் எம்.இராமாநிதி, மாநில பொதுச்செயலாளர் பி.கிருஷ்ணசாமி, திண்டுக்கல் மாவட்ட நிர்வாகிகள் அன்னக்கொடி, செல்வக்கொடி, தோழர் ஈடித், நாகஜோதி, கோவை மாவட்ட கௌரவத் தலைவர் சக்திவேல், சிலம்பரசன் ஆகியோர் திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர். கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் விரைவில் தமிழக ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கும், பம்பு ஆப்ரேட்டர்களுக்கும் ஊதிய உயர்வு என்ற நல்ல செய்தியை திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் அறிவிப்பார் என்றார். அதற்கு மாநில நிர்வாகிகள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நன்றி தெரிவித்து வாழ்த்து தெரிவித்தனர். அதன் பின்னர் அமைச்சர் கிராம ஊராட்சிகளில் இளைஞர்கள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடத்தும் விளையாட்டு போட்டிகளுக்கு நிதி உதவி வழங்கி ஒற்றுமையுடன் விளையாட்டு போட்டிகளை நடத்த வேண்டுமென வாழ்த்தினார். நிகழ்ச்சியின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், கிழக்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் ஆ.நாகராஜன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலர் வடிவேல் முருகன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்யேகன், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## சுற்றுலா பயணிகளுக்காக சென்னையில் டபுள் டெக்கர் பேருந்து சேவை

சென்னை, ஜன.12-

மும்பை உள்ளிட்ட பெரிய மாநகரங்களில், 20 ஆண்டுகளுக்கு முன்பு டபுள் டெக்கர் பேருந்துகள் இயக்கப்பட்டன. இந்த பேருந்துகளில் ஒரே நேரத்தில்அதிக பேர் பயணிக்கலாம். மாநகரங்களின் உயரமான கட்டடங்களின் அழகையும் ரசிக்கலாம். குறிப்பாக, சென்னையில் தாம்பரம் பிராட்வே இடையே 18 ஏ வழித்தடத்தில் டபுள் டெக்கர் பேருந்துகள் இயக்கப்பட்டன. இதற்கிடையே, மாநகரில் மேம் பாலங்கள் அதிகரிப்பு மற்றும் போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட காரணங்களால், இந்த பேருந்துகளின் சேவை 2008ம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. இதையடுத்து, இரண்டு பேருந்துகளை ஒருங்கிணைந்த டிரெய்லர் பேருந்துகள் இயக்கப்பட்டன. குறுகிய சாலையில் செல்வது




கஷ்டமாக இருந்ததால், இந்த சேவையும் நிறுத்தப்பட்டது. தற்போது, புதுபொலிவுடன் ஏசி வசதியுடன் கூடிய அதிநவீன மின்சார ஏசி பேருந்துகள் பல்வேறு நகரங்களில் இயக்கப்படுகின்றன. இதுபோல, 18 ஆண்டுகளுக்கு பிறகு, மீண்டும் டபுள் டெக்கர் பேருந்து சேவையை இயக்க மாநகர போக்குவரத்து கழகம் திட்டமிட்டுள்ளது. அந்த வகையில், முதல் கட்டமாக, 20 டபுள் டெக்கர் ஏசி மின்சார பேருந்துகளை வாங்கவும், இயக்கப் பணிகளை மேற்கொள்ளவும் மாநகர போக்குவரத்து கழகம் ஒப்பந்தப் புள்ளி கோரியுள்ளது. இதற்கிடையில், சுற்றுலா பயணிகளுக்காக, சென்னையில் மீண்டும் டபுள்டெக்கர் பேருந்துசேவை தொடங்கப்படவுள்ளது. சென்னையின் அழகை சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசிக்கவும், சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில், முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு டபுள் டெக்கர் பேருந்து சேவையை தொடங்க சுற்றுலாத் துறை முடிவு செய்துள்ளது. அதன்படி, அயலக தமிழர்கள் நிதி பங்களிப்புடன் முதல் கட்டமாக குளிர்சாதன வசதி கொண்ட ஒரு மின்சார டபுள் டெக்கர் பேருந்து அசோக் லேலண்ட் நிறுவனம் தயாரித்துள்ளது. சிவப்பு நிறத்தில் இருக்கும் இந்த பேருந்தின் இரு பக்கவாட்டிலும் தஞ்சை பெரியகோயில், கலங்கரை விளக்கம், ரிப்பன் கட்டிடம், ஜல்லிக்கட்டு காளையை அடக்கும் வீரன் உள்ளிட்ட புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. அதில், மிகப்பெரிய அளவில் தமிழ் வாழ்க என எழுத்துகளும் இடம்பெற்றுள்ளன.

முன்னதாக, இந்த பேருந்து அடையாறு மாமல்லபுரம் தடத்தில் இயக்கி சோதிக்கப்பட்டது. தற்போது, இப்பேருந்தின் சோதனை ஓட்டம் நிறைவடைந் துள்ளது. இந்நிலையில், சுற்றுலா பயணிகளுக்காக, டபுள் டெக்கர் பேருந்து சேவை தொடங்கவுள்ளது. இப்பேருந்து இயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். அயலக தமிழர்கள், அசோக் லேலண்ட் நிறுவனத்திடம் இருந்து இப்பேருந்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெற்று சுற்றுலாத் துறையிடம் ஒப்படைக்கிறார். இந்நிகழ்வு (ஜன.12) நடைபெறுகிறது. இந்த பேருந்து, அடையாறு மாமல்லபுரம் இடையே பேருந்து இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. வார இறுதி நாட்கள், விடுமுறை நாட்களில் சென்னை நகர சுற்றுலாவுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. சென்னையில் மீண்டும் டபுள் டெக்கர் பேருந்து சேவை தொடங்க இருப்பதால். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



## மாவட்ட அளவில் திசையன்விளை விஎஸ்ஆர் பள்ளி மாணவர்கள் சாதனை தாளாளர் விஎஸ்ஆர்.ஜெகதீஷ் பாராட்டு

திருநெல்வேலி, ஜன.12-

மாவட்ட அளவில் MM பொறியியல் கல்லூரியில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் 20 அணிகளுக்கு மேலாக கலந்து கொண்டனர். இதில் திருநெல்வேலி திசையன்விளை விஎஸ்ஆர் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்று வெற்றி கோப்பையும், பரிசையும் பெற்றனர். மாணவர்களை பள்ளி தாளாளர் வி எஸ் ஆர் ஜெகதீஷ் மற்றும் துணை முதல்வர் விஜயா தினகரன் வாழ்த்தி பாராட்டினர் மாணவன் முகமது கபிஸ் ஜெபருல்லா கேப்டனாக சிறப்பாக வழி நடத்தினார். கோபிகிருஷ்ணன் பல விக்கெட்டுகள் எடுத்து அணிக்கு அதிக பலம் சேர்த்தார். மாணவர்களின் கடின உழைப்பும், சிறப்பான விளையாட்டு முதல் இடத்தை பெற்று தந்தது. மாணவர்களுக்கு சிறந்த பயிற்சியும், ஊக்கமும் அளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் தவசிக்கனி பெர்கின்ஸ், பிரின்ஸ், ரிஷியா ஆகியோரையும் தாளாளர் வாழ்த்தினர் மற்றும் ஆசிரிய ஆசிரியர்களும் மாணவர்களை வாழ்த்தினர்

## தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற அரசு விழா

தென்காசி, ஜன.12-

தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் ரூ. 2 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்து, ரூ. 3 கோடியே 19



இலட்சம் மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்தும், 507 பயனாளிகளுக்கு ரூ.1.21 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பழனிநாடார் (தென்காசி) ஈ.ராஜா (சங்கரன்கோவில்) ஆகியோர் உள்ளனர்.



## முதல்வர் உங்களுக்கு எண்ணற்ற திட்டங்களை தந்திருக்கிறார் மதிமுக சட்டமன்ற உறுப்பினர் புகழாரம்

தென்காசி, ஜன.12-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரியில், மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சியானது டினன்.புதுக்குடி பகுதியில் உள்ள தனியார் கல்லூரி அரங்கில் வைத்து நடைபெற்றது. இதில் தென்காசி மாவட்ட ஆட்சியர் கமல்கிஷோர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலைக்குமார், உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவ, மாணவியற்கு இலவச மடிக்கணினி வழங்கினர். தொடர்ந்து மாணவர்கள் மத்தியில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் தமிழக முதல்வர் அவர்கள் மாணவ செல்வங்கள் இந்த உலகத்தை கைக்குள் வைத்திருக்க வேண்டும். என்ற அறிய நோக்கத்தில் இந்த மடிக்கணினியை கொடுத்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பை நீங்கள் பெற்றவர்கள் இதற்கு எனது வாழ்த்துக்கள். இதில் கல்லூரி செயலாளர் முருகன் நகர்மன்ற துணைத்தலைவர் அந்தோனிச்சாமி, ஆசிரியர் முருகேசன், மனோ கல்லூரி சேர்மன் எஸ்பி கண்ணன், மற்றும் கல்லூரி பேராசியர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பிரதமர் மோடி இந்தியாவின் பாதுகாப்பு அரணாக இருக்கிறார்" முகேஷ் அம்பானி புகழாரம்

புதுடெல்லி, ஜன.12-

"பிரதமர் மோடி காலத்தில்தான் இந்தியா ஒரு உலகளாவிய சக்தியாக மாறியது என்பதை வரலாறு பதிவு செய்யும். பிரதமர் மோடி இந்தியாவின் பாதுகாப்பு அரணாக இருக்கிறார்," என்று ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி தெரிவித்துள்ளார்.குஜராத்தில் நடந்த 'வைப்ரண்ட் குஜராத்' மாநாட்டில் பேசிய முகேஷ் அம்பானி, "கடந்த ஐந்து ஆண்டுகளில், நாங்கள் ரூ.3.5 லட்சம் கோடி முதலீடு செய்துள்ளோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த முதலீட்டை ரூ.7 லட்சம் கோடியாக இரட்டிப்பாக்கி, ஒவ்வொரு இந்தியருக்கும் அபரிமிதமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். உலகம் மிக வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். புவிசார் அரசியல் சூழ்நிலை, எதிர்பாராத சில பதற்றங்கள் உட்பட புதிய சவால்களை உருவாக்கி வருகிறது.இருப்பினும், இந்தியா இவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த சவால்கள் நமது மக்களைத் தொடவோ அல்லது தொந்தரவு செய்யவோ முடியாது என்பதுதான் இந்தியாவுக்கு ஆறுதல் அளிக்கும் விஷயம். ஏனென்றால், இந்தியாவின் அசைக்க முடியாத பாதுகாப்பு அரணாக பிரதமர் நரேந்திர மோடி இருக்கிறார். உலக அரங்கில் இந்தியாவின் நம்பிக்கையை அவர் மீட்டு எடுத்துள்ளார். மோடி காலத்தில்தான் இந்தியா ஒரு உலகளாவிய சக்தியாகவும் மாறியது என்பதை வரலாறு பதிவு செய்யும்.2036 ஒலிம்பிக் போட்டிகளை அகமதாபாத்தில் நடத்த திட்டமிட்டிருக்கும் பிரதமரின் தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவளிக்க ரிலையன்ஸ் அறக்கட்டளை தயாராக உள்ளது." என்றார்.

## தென்காசி மாவட்டம் வடகரைகீழ்பிடாகை வட்டாரம் பண்பொழி, நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ சேவை முகாம்.

தென்காசி, ஜன.12-

தென்காசி மாவட்டம் வடகரைகீழ்பிடாகை வட்டாரம் பண்பொழி, மசூது ராவுத்தர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் (10.01.2026) நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் ஆகியோர் கலந்து



கொண்டு பார்வை யிட்டார்கள். இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல், மகப்பேறு மற்றும் மகளிர் நலம், குழந்தைகள் நலம், இருதயவியல், நரம்பியல், தோல், பல், கண், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை, நுரையீரல் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்து வகையிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை போன்ற அனைத்து சேவைகளும் தகுதியுள்ளவர்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொது மக்கள் அனைவரும் முகாமிற்கு வருகை தந்து மருத்துவப் பரிசோதனை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., தெரிவித்தார்.இம்முகாமில், மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் கூி.கோவிந்தன். வட்டார மருத்துவ அலுவலர் மரு.கூி.சுந்தராம்பாள், பண்பொழி பேரூராட்சி மன்ற தலைவர் ராஜராஜன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் நாகராஜன் மற்றும் மருத்துவ அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ பணியாளர்கள், பொதுமக்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.



## திருப்பூரில் திராவிட வெற்றிக் கழகம் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்

திருப்பூர், ஜன.12-

திருப்பூர் குமரன் சிலை முன்பு திராவிட வெற்றிக் கழகம் சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாணவர்களுக்கு கல்வி உடன் தொகையை தள்ளுபடி செய்ய வேண்டும், திருப்பூர் கோவை வழியாக மதுரைக்கு மெட்ரோ ரயில் அமைத்து தர வேண்டும், நொய்யல் ஆற்றல் சாயக்கழிவு கலப்பது தடுக்க வேண்டும், மோசமான சாலைகளை சீரமைக்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து திராவிட வெற்றிக் கழகம் நிறுவனத் தலைவர் தென்னாட்டு கேபி சரவணன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச் செயலாளர் பொன் குமார், தலைமை நிலைய செயலாளர் பிரகலாதன், துணைப் பொதுச் செயலாளர் மணிகண்டன், மாநில அமைப்பு செயலாளர் செல்லத்துரை, மாநில இளைஞரணி செயலாளர் சங்கரநாராயணன், மாநில விவசாய அணி செயலாளர் பெருமாள், மாவட்ட கழகச் செயலாளர் கார்த்தி, மாநகர இளைஞரணி துணைச் செயலாளர் சங்கர், செயற்குழு உறுப்பினர்கள் ஆனந்தன், கஜேந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் மத்திய மாவட்ட 43 வது வட்ட கழகம் சார்பில் திராவிட பொங்கல் விழா

திமுக திருப்பூர் மத்திய மாவட்ட கருவம்பாளையம் பகுதி கழகத்திற்கு உட்பட்ட 43 வது வட்டக் கழக அலுவலகம் முன்பு திராவிட பொங்கல் விழா மு விளையாட்டு விழா 300 தாம்பூல தட்டு வழங்கும் விழா மற்றும் அன்னதானம் வழங்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவினை மத்திய மாவட்ட கழக செயலாளர் க.செல்வராஜ் எம்எல்ஏ துவக்கி வைத்தார். நிகழ்ச்சியினை 43 வது வட்டக் கழக செயலாளர் பி கே கணேசன்.மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சரவணன்



ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இதில் மாநகர செயலாளர் டிகேடி நாகராஜ்.பகுதி செயலாளர்கள் மியாமி ஐயப்பன்.நந்தகோபால்.42 வட்ட கழக செயலாளர் எஸ் ஆர் ரமேஷ் மற்றும். மாநகர வலைதள பொறுப்பாளர் ஆனந்தி, சகுந்தலா, தெற்கு தோட்டம் செந்தில், சிட்டிபாபு, கண்ணன், தினேஷ், ஜின்னா பாய், சிட்டி வடிவேல், ரமேஷ்,கிங் பாய், தொழுசாகாத்திகேயன், விக்னேஷ், செந்தில், சதீஷ், சிங்கர்,பழனிச்சாமி,கிஷோர், சையது நூர்.உள்ளிட்ட திமுக கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



## கொடைக்கானல்: ஜன.12 முதல் வனத்துறை சுற்றுலா இடங்களுக்கு நுழைவுக் கட்டணம் ஆன்லைனில் மட்டுமே வசூல்

கொடைக்கானல், ஜன.12-

கொடைக்கானல் வனத்துறை சுற்றுலா இடங்களுக்கு செல்ல (ஜன.12) முதல் கூகுள் பே, போன் பே உள்ளிட்ட ஆன்லைன் பண பரிவர்த்தனை மூலமாக மட்டுமே நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படும் என வனத்துறை அறிவித்துள்ளது.திண்டுக்கல் மாவட்டம் கொடைக் கானலில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களான குணா குகை, மோயர் சதுக்கம், தூண் பாறை, பைன் மரக்காடுகள் ஆகியவை வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இங்கு தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு சுற்றுலா இடங்களுக்கும் அந்தந்த இடத்தில் தனியாக நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், கடந்த செப்டம்பர் மாதம் முதல் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் ஒரே இடத்தில் நுழைவு கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி, வனத்துறை சுற்றுலா இடம் தொடங்கும் பகுதியான தூண் பாறையில் , அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் சேர்த்து சுற்றுலா பயணிகளிடம் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நாளை (ஜன.12) முதல் இந்த நடைமுறை மாற்றப்பட்டு, நுழைவு கட்டணம் கூகுள் பே, போன் பே உள்ளிட்ட ஆன்லைன் பண பரிவர்த்தனை மூலமாக மட்டுமே வசூலிக்கப்படும். நேரிடையாக பணமாக வசூலிக்கப்பட மாட்டாது எனவனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மும்பை, நாக்பூரில் 58 பாஜக நிர்வாகிகள் இடைநீக்கம்

மும்பை, ஜன.12-

மகாராஷ்டிராவில் 29 மாநகராட்சிகளுக்கான தேர்தல் ஜனவரி 15ம் தேதி நடைபெற உள்ளது.


இந்நிலையில் கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்தல், கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவித்தல், மகாயுதி வேட்பாளர்களுக்கு ஒத்துழைக்க தவறியது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆளான 58 நிர்வாகிகளை பாஜக 6 ஆண்டுகளுக்கு இடைநீக்கம் செய்துள்ளது.

இவர்களில் முன்னாள் மேயர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகளும் அடங்குவர். இந்த 58 பேரில் 26 பேர் மும்பையையும் 32 பேர் நாக்பூரையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

## உத்தமபாளையம் அரசு உதவி பெறும் ஹாஜி கர்த்தராவுத்தர் கல்லூரியில் நலம் நாடி இலவச யோகா பயிற்சி முகாம்

தேனி, ஜன.12-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் அரசு உதவி பெறும் ஹாஜி கர்த்தராவுத்தர் கல்லூரியில் நலம் நாடி என்ற தலைப்பில் இலவச யோகா பயிற்சி முகாம் நடைபெற்றது.இந்த பயிற்சியில் உத்தமபாளையம் யோகா மாஸ்டர் ஸ்ரீதா பங்கேற்று பொதுமக்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் பள்ளி குழந்தைகளுக்கும் யோகாவின் நன்மைகள் பயன்கள் உடலும் உள்ளமும் எவ்வாறு ஒரு நிலைப்படுத்தி யோகாவின் முக்கியத்துவத்தை விளக்கி உடல் மொழியில் பயிற்சி





வகுப்புகள் எடுத்தார்.இந்த இலவச யோகா பயிற்சி முகாம் நடைபெற்றது உத்தமபாளையம் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான கல்லூரி மாணவர்கள், பள்ளி குழந்தைகள், பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளனர்.இந்த யோகாசனத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட யாசனங்களை கற்றுக் கொடுத்த யோகா ஆசான் ஸ்ரீதா யோகாவில் ஒவ்வொரு யாசனத்திற்கும் ஒவ்வொரு பயிற்சிகளை எடுத்துக்கொண்டு மனதும் உள்ளமும் ஒருநிலை படுத்த வேண்டும் என்று கல்லூரி மாணவர்கள் மாணவிகளுக்கு பொதுமக்களுக்கும் தத்ரூபமாக யோகாசனம் செய்து காட்டி அதன்படி அவர்களுக்கு பயிற்சி அளித்தது பெரும் வரவேற்பை பெற்றது. ஹாஜி கர்த்தராவுத்தர் கலை அறிவியல் கல்லூரி தன்னாட்சி உடற்கல்வி பேராசிரியர் பயிற்சி முகாம் அக்பர் அலி சிறப்புரையாற்றி கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கும், பொதுமக்களுக்கும் சான்றிதழ் வழங்கினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000